செ.வெ.எண்:680

## செய்தி வெளியீடு–18.8.2008

## பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் பள்ளியை சிறப்புத் தகுதி மையமாக மேம்படுத்த 1 கோடி ரூபாய் அனுமதி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றும் ஒரு துறையைத் தேர்வு செய்து, அவற்றைச் சிறப்புத் தகுதி மையங்களாக மேம்படுத்துவதற்கு வகைசெய்யப்படுமென 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பின்படி, கடந்த ஆண்டில் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு 1 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின்கீழ் உள்ள உயிர் அறிவியல் பள்ளியை, "சிறப்புத் தகுதி மையமாக" மேம்படுத்திட 1 கோடி ரூபாய் நிதி வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை 9